**செய்தி வெளியீடு எண்: 01/2022** **நாள்: 05.01.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**<u>கடந்த ஆறு ஆண்டுகளில் 9.80 கோடி பேர் மெட்ரோ இரயிலில் பயணித்துள்ளார்கள்</u>**

**<u>கடந்த 2021-ம் ஆண்டில் மட்டும் 2.53 கோடி பேர் மெட்ரோ இரயிலில் பயணித்துள்ளார்கள்</u>**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தனது மெட்ரோ இரயில் சேவையை கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூன் 29 முதல் சென்னையில் துவங்கியது. இதுவரை சென்னையில் உள்ள மக்களுக்கும், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் பணியாற்றுபவர்களுக்கும் சென்னை மெட்ரோ இரயில் ஒரு நம்பகமான பாதுகாப்பான போக்குவரத்து வசதியை செய்து வருகிறது. மெட்ரோ இரயில் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து வருகிறது. இதனால், கடந்த 2021-ம் ஆண்டில் மட்டும் 2.53 கோடி பேர் மெட்ரோ இரயிலில் பயணித்துள்ளார்கள்.

இதைத் தவிர்த்து, பயணிகளின் வசதிகாக 12 இணைப்புச் சிற்றுந்து சேவைகள் மெட்ரோ இரயில் நிலையங்களில் இயக்கப்பட்டு வருகிறது.

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் துவங்கியதிலிருந்து நாளுக்கு நாள் பயணிகளின் எண்ணிக்கை சீராக அதிகரித்து வருகிறது. கடந்த 2015 முதல் 2018 வரை 2,80,52,357 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

கடந்த 2019-ம் ஆண்டில் 3,28,13,628 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணித்துள்ளார்கள்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொது முடக்கத்தினால் சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த 2020-ம் ஆண்டு மட்டும் 1,18,56,982 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று காலம் என்பதால் கடந்த 2021-ம் ஆண்டு மே மாதம் முதல் ஜூன் மாதம் வரை மெட்ரோ இரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன. இந்நிலையில் கடந்த 2021-ம் ஆண்டு மட்டும் 2,53,03,383 கோடி பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

இதுவரை சென்னை மெட்ரோ இரயிலில் கடந்த ஆறு ஆண்டுகளில் அதாவது, 2015-ம் ஆண்டு முதல் 2021-ம் ஆண்டு வரை 9,80,26,350 கோடி பயணிகள் பயணித்துள்ளார்கள்.

மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களை பராமரிப்பதில் மிகுந்த ஒத்துழைப்பு நல்கிவரும் அனைத்து பயணிகளுக்கும் சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**